# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,888 — 1931 ம் ஹ ஐப்பசிமீ 16 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

---

### அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஹ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கெலனியா, பேலியகொட மற்றும இடங்களுக்கு எலெக்றிக்கல் கைரென்ஸன் ஸ்டேசன் கட்டுதல் என்னும் பகிரங்கதேவைககு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 20,298. குறிச்சி—வெதமுல்ல.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம் ஏ. றூ. ப |
|---|---|---|---|---|
| 1 | வளவ்வவத்த அல்லது பெலிகக வத்தயும் கொங்ககவத்தையும் | தென்னங்காணி, 9 தென்னையும் 1 தேம்பமாமு முள்ளது | ஏ. ஏ. டி. சில்வாவும் எல். அமரசிங்கவும் | 0 0 39·2 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம். பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1931 ம் ஹ (கார்த்திகை) மாசம் 20 ந் தேதியிலன்று 10 மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1931 ம் ஹ ஐப்பசிமீ 12 ந் உ.

எச். பி. கொவ்மன்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஹ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பிரசித்த மலசலங்களிக்கும் கட்டிடத்திற்கும் அதற்குப் போகிற வழிக்கும் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இலக்கம் 3,038. குறிச்சி—இரத்தினபுரி நகரசங்க எல்லைக்குள்.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | டெத்தாபிட்டியவத்தை .. | தென்னந்தோட்டம் .. | ஏ. எல். எம். முஸ்தபா கச்சியாரின் ஆஸ்திக்கு உரித்தாளிகள் | 0 0 9·2 |
| 2 | ஷை .. | ஷை .. | ஷை .. | 0 0 8 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1931 ம் ஹ கார்த்திகை மாதம் 18 ந் தேதியிலன்று முற்பகல 10·30 மணிக்கு இரத்தினபுரிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

இரத்தினபுரிக் கச்சேரி,
1931 ம் ஹ ஐப்பசிமீ 13 ந் உ.

ஜீ. எச். கொலின்ஸ்,
சப்பிரகாம மாகாண அரசாட்சி ஏசண்டு.

285——J. N. 13420-121 (10/31)

## நகரசங்க அறிவித்தல்.

### 1920 ம் ஆண்டு 11 ம் இலக்க தத்தமிட ஆளுகைச்சட்டம்.

*டெகிவலை மவுன்றலவினியா நகர (டிஸ்திறிக்) சங்கம் அங்கத்தவர் தேர்தல்.*

வருகிற கார்த்திகைமீ 28 ந் திகதி சனிக்கிழமையன்று டெகிவலை மவுன்றலவினியா நகர (டிஸ்திறிக்) சங்கத்திற்கு அங்கத்தவர்களைத் தேர்தல்செய்ய உத்தேசப்பட்டிருக்கிறதென்று இத்தாலறிவிக்கப்படுகின்றது.

அங்கத்தவர்களாகத் தேரப்பட முன்வரும் ஒவ்வொருவருடைய பெயரும் எழுத்தில் கொடுபடவேண்டும். அப்பெயர்கொண்ட பத்திரம் (நொமினேஷன் பேப்பர்) அப்பெயர் வழிக்ஙரர் எந்தத் தெரிவிலும் பிரிவிற்குத் தேரப்படுவதற்கென்று முன் வருகிறாரோ அந்தப்பிரிவிற்கு அங்கத்தவரைத் தேர்தல்செய்ய யோக்கியதை உள்ளவர்களின் டாப்பில் தமது பெயர்கள் உள்ளவர்களாகிய கட்சி இருவராலாவது கையொப்பமிடப்பட்டு அப்பத்திரம் கொடுபடுவதற்கென்று நியமித்திருக்கும் 1931 ம் ஆண்டு கார்த்திகைமாதம் 28 ந் திகதியன்று நடுப்பகல் 12 மணிக்கு அல்லது முன்னதாகவே டெகிவலை மவுன்றலவினியா நகர (டிஸ்திறிக்) சங்கக் கந்தோரில் கொடுபடவேண்டும்.

ஏதாவதோர் பிரிவிற்கு அங்கத்தவர்களாகத் தேரப்படுவதற்கென்று ஒருவருக்கு மேலானவர்களின் பெயர்கள் கொடுபடுமாயிருந்தால் கீழே காட்டியபடி அப்பிரிவிற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் வாக்கு (வோட்) கொடுக்குமிடத்திலும் திகதியிலும் வாக்கு (வோட்) எடுக்கப்படும். அவ்வாக்கு (வோட்) எடுத்தல் முற்பகல் 8 மணிக்குத் தொடங்கிப் பிறபகல் 5 மணிக்கு நிறுத்தப்படும்.

| வாக்கு (வோட்) கொடுக்குமிடங்கள். | திகதி 1931. |
|---|---|
| 1 ம் தெரிவுப் பிரிவிற்கு, டெகிவலை, டெகிவலைச் சந்தை (மாக்கெற்) .. | மார்கழி 11 |
| 2 ம் தெரிவுப்பிரிவிற்கு, களுபோவில, களுபோவில புத்தர் பாடசாலை .. | மார்கழி 12 |
| 3 ம் தெரிவுப்பிரிவிற்கு, கறகம்பிட்டி, கறகம்பிட்டிச் சந்தை .. .. | மார்கழி 11 |
| 4 ம் தெரிவுப்பிரிவிற்கு, மவுன்றலவினியா, சென்ற் தோமஸ் (சிறுவர்) பாடசாலை .. .. | மார்கழி 12 |
| 5 ம் தெரிவுப் பிரிவிற்கு, வத்தறப்பொல, ரெம்பிளர் தெருவில் மிஸ்டர் சி. ஏ. டி. அல்விசின் காணியிலுள்ள பந்தல் .. | மார்கழி 11 |
| 6 ம் தெரிவுப் பிரிவிற்கு, றத்மலான, சிறிதர்மரும பாடசாலை மண்டபம் .. | மார்கழி 12 |

எம். எம். வெடர்பேன்,
அரசாட்சி ஏசென்று, மேல்மாகாணம்.

கொழும்புக் கச்சேரி,
1931 ஐப்பசிமீ 12 ந் திகதி.

---

## சுகாதாரசங்கத்திற்கு அரசாட்சி உத்தியோகத்தரல்லாத அங்கத்தவரைத் தெரிவுசெய்தல்.

*மட்டக்களப்பு சுகாதாரசங்கத்திற்கு அரசாட்சி உத்தியோகத்தினரல்லாத அங்கத்தினர் தெரிவு.*

மட்டக்களப்புப் பட்டணத்தின் சுதேச, சௌக்கிய, சீர்திருத்தச் சங்கத்திற்கு, அப்பட்டணத்தின் பின்சொல்லப்படும் பகுதிகள் ஒவ்வொன்றிற்கும் 1932 ம் 1933 ம் ஆண்டுகளுக்கு பின்சொல்லப்படும் திகதிகளில் அரசாட்சி உத்தியோகத்தினரல்லாத ஒவ்வொரு அங்கத்தினரை 1898 ம் ஆண்டின் 13 ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின் 11 ம் பிரிவுக்கடக்கமாக தெரிவு செய்யப்படுமென்று இத்தாலறிவிக்கப்படுகின்றது. அங்கத்தினராய் வர விரும்புவோர் மேற்சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 6 ம் பிரிவிற் சொல்லியபடி தகுதியுள்ளவராயிருந்து எழுத்தில் பெயர் குறிக்கப்படல் வேண்டும். பெயர் குறிக்கப்பட்ட பத்திரங்கள் ஒவ்வொரு கேள்விக்காரரும் எந்தப்பகுதிக்கு அங்கத்தினராய் வர விரும்புகிறாரோ அந்தப்பகுதிக்குச் சம்மதஞ்சொல்லத் தகுதியுள்ளவர்களின் பெயர்வழி இடாப்பிலுள்ள இரண்டு பெயருக்குக் குறையாதவர்களால் கையொப்பமிடப்பட்டு 1931 ம் ஆண்டு கார்த்திகைமீ 25 ந் திகதி முற்பகல் 11 மணிக்கு சுதேசசங்கக் கந்தோரில் கொடுபடல் வேண்டும்.

எந்தப் பகுதிக்காவது ஒன்றிற்கு மேற்பட்ட அங்கத்தினரைப் பெயர் குறிக்கப்பட்டால் அப்பகுதிக்கு நியமிக்கப்பட்ட பின் சொல்லப்படும் திகதியிலும் இடத்திலும் தெரிந்துகொள்ளுதற் சீட்டுப்போடப்படும்.

*அச்சீட்டுப்போடுகை பிற்பகல் ஒரு மணிக்குத் தொடங்கி ஐந்து மணிக்கு முடியும்.*

(1) புளியந்தீவுப் பகுதி.

சீட்டுப்போடும் திகதி—1931 ம் ஆண்டு மாாகழிமீ 8 ந் உ.
சீட்டுப்போடும் இடம்—மட்டக்களப்புக் கச்சேரி

(2) கோட்டைமுனைப் பகுதி.

சீட்டுப்போடும் திகதி—1931 ம் ஆண்டு மார்கழிமீ 9 ந் உ.
சீட்டுப்போடும் இடம்—மட்டக்களப்புக் கச்சேரி

(3) அமிர்தகளிப் பகுதி.

சீட்டுப்போடும் திகதி—1931 ம் ஆண்டு மார்கழிமீ 9 ந் உ.
சீட்டுப்போடும் இடம்—மடக்களப்புக் கச்சேரி.

சீ. ஹரிசன் ஜோன்ஸ்,
கீழ்மாகாண அரசாட்சி ஏசன்று.

மட்டக்களப்புக் கச்சேரி,
1931 ம் ஆண்டு ஐப்பசிமீ 10 ந் திகதி.

---

## உத்தியோக சம்பந்தமில்லாதவரின் அறிவித்தல்.

### நோட்டிஸ்.

நீர்கொழும்பு டிஸ்திரிக் அளுத்கூருகோரளே தாஸயபத்துவே பொரகொடவத்தையில் இருக்கும் பட்டிவில ஆராச்சிகே அட்மெண்ட் பிரேரா நவரத்ன ஆகிய நான் இலங்கை அரசாட்சியின் 1907 ம் ஹூ 1 ம் இலக்கச் சட்டத்தின் செடியூல் 1B ன் 2 ம் பிரமாணத்தின்படி இன்று துவக்கம் 3 மாசத்துக்குபின் கொழும்பு டிஸ்திரிக்கில் சிங்கள பாஷையில் பிரசித்த நொத்தாரிஸ்வாக வேலைபார்க்கிறதற்கு ரிஜிஸ்ருர் ஜெனரால் அவர்களுக்கு மனுச்செய்வேனென்று இத்தால் விளம்பரப்படுத்துகிறேன்.

இப்படிக்கு,
ஈ. பீ. நவரத்ன.

1931 ம் ஹூ அக்ரோபர்மீ 1 ந் உ.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.